# நாம் அச்சத்தோடும் அவமானப்பட்டும் நிற்கும் போது தேவன் நமக்கு உதவுகிறார்

ஒவ்வொரு பிள்ளையும் கர்த்தருக்குள் சமாதானத்தையும் பாதுகாப்பையும் காணும்படி இந்த பாடத்தை உபயோகிக்குமாறு அவரை வேண்டிக் கொள்ளுங்கள்.

**தயாரிப்பு:** பிள்ளைகள் மென்மையான சில கற்களை சேகரிக்கட்டும். அதன் மேல் அவர்கள் எழுதும்படியாக இருக்க வேண்டும்.



பிள்ளைகள் இந்தப் படங்களில் வண்ணம் பூச விரும்புவார்கள்.

1 சாமுவேல் 17:20-51 ல் இருக்கும் தாவீதும் கோலியாத்தும் பற்றிய கதையை வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறலாம். முடிந்தால் கொஞ்சம் பெரிய பிள்ளை மற்றவர்களுக்காக வாசிக்கட்டும். தேவ வல்லமை எவ்வாறு அச்சத்தையும் அவமானத்தையும் மேற்கொள்ளுகிறது என்பதை குழந்தைகளிடம் கேள்விகளாகக் கேட்கலாம்.

- தன்னுடைய மூத்த சகோதரர்கள் சேனையில் போர் செய்து கொண்டு இருந்தபோது தாவீது என்ன செய்து கொண்டிருந்தான்?
- தன்னுடைய தந்தையின் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்த போது தாவீது என்ன செய்ய கற்றுக் கொண்டான்?
- தாவீது போர்க்களத்திற்கு வந்தபோது அவனுடைய மூத்த சகோதரர்கள் என்ன குற்றச் சாட்டைக் கூறினர்?
- சண்டையிடப் போன போது தாவீது சவுலின் கவசங்களை தரித்துக்கொள்ள ஏன் மறுத்தான்?
- கோலியாத் என்ற இராட்சசனை எதிர்த்து போன போது தாவீதைப் பலப்படுத்தியது யார்?
- மக்களை பயமுறுத்திக் கொண்டிருந்த ஓர் அரக்கனைக் கொல்ல ஓர் இளம் பையனுக்கு தேவன் எவ்வாறு உதவினார்?



**செயல்பாடு:** நமது பயங்களைத் தோற்கடித்தல்.

- மக்களிடம் இருக்கும் சில பயங்களைப் பற்றி ஒரு பெரிய தாளில் எழுதவும். குழந்தைகளும் தங்களது சில பயங்களைப் பற்றி கூறக் கூடும்.

- பெரிய பிள்ளைகள் தேவனை பற்றி விளக்கும் சில வார்த்தைகளை கற்களின் மேல் எழுதட்டும். தேவனைப் பற்றி கூறும் வார்த்தைகளை எல்லோருமே கூறட்டும். சில உதாரணங்கள்: "வல்லமையுள்ளவர்," "எல்லாம் அறிந்தவர்", "என்னை நேசிப்பவர்", "எங்கும் இருப்பவர்", "என்னைக் காப்பவர்". தங்களுடைய அச்சம் எழுதப்பட்ட காகிதங்களை குறியாக வைத்து சிறுவர்கள் இந்தக் கற்களை எறியட்டும். இதற்காக குழந்தைகளை வெளியே கூட்டிச் செல்லலாம்.

சிந்திக்க வேண்டிய சில விஷயங்கள்: பலவீனமான மக்களைக் காக்கும் தேவ வல்லமையை கற்கள் நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. கோலியாத்தை நோக்கி தாவீது வீசிய கல் சிறியதே. ஆனால் தேவன் அதை வல்லமையுள்ளதாக மாற்றினார்:



உன்னதமானவரின் உயர்ந்த அடைக்கலம். 91 ஆம் சங்கீதத்தின் நான்கு பகுதிகளை நான்கு சிறுவர்சிறுமிகள் வாசிக்கலாம்; மனப்பாடமாகக் கூறலாம்; அல்லது பாடலாம் (வசனங்கள் 1,2,4,5,6,7,11,12).

உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன்
சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.
நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம்,
என் கோட்டை, என் தேவன், நான் நம்பி
இருக்கிறவர் என்று சொல்லுவேன்.
அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்;
அவர் செட்டையின் கீழே அடைக்கலம் புகுவாய்.
இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
பயப்படாது இருப்பாய்.
உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன்
வலது புறத்தில் பதினாயிரம் பேரும்
விழுந்தாலும், அது உன்னை அணுகாது.
உன் வழிகளில் எல்லாம் உன்னைக் காக்கும்படி
உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை இடுவார்.
உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு
அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொண்டு போவார்கள்.

**1 சாமு. 17:1-51 ல் உள்ள தாவீது கோலியாத் கதையை நாடகமாக நடிக்கவும்**

- ஆராதனையை வழிநடத்தும் தலைவர்களோடு கலந்து பேசி பெரியோர்களுக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்டவும்.
- நேரம் குறைவாக இருந்தால் கதையின் முக்கியம் இல்லாத பகுதிகளை விட்டு விடவும்
- சில பிள்ளைகள் இஸ்ரவேல் வீரர்களாகவும், சிலர் பெலிஸ்தரின் சேனைகளாகவும் நடிக்கலாம். தேவையான அளவுக்கு குழந்தைகள் இல்லாவிட்டால் பெரியவர்களை உதவிக்கு அழைக்கலாம்.
- என்ன பேச வேண்டும் என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் நன்கு அறியும் வரை தொடர்ந்து பயிற்சி செய்யவும்.

வேதாகமத்தில் வரும் நபர் சொல்வதை, செய்வதை நடிகர்கள் நடிக்க, **கதை கூறுபவர்** மற்ற பகுதிகளை வாசிக்க வேண்டும்.

**கோலியாத்** ஒரு தடியைப் பிடித்துக்கொண்டு (ஈட்டிக்கு பதில்) கோபமாகக் கத்த வேண்டும்.

**தாவீது** ஒரு கவணை எடுத்துச் செல்வது போல் பாவிக்க வேண்டும். அது இரண்டு கயறுகள் கட்டிய ஒரு தோல் துண்டு. தலையை சுற்றி சுழற்றி ஒரு கயற்றை நழுவ விடும்போது கல் பறக்கும்.

**ஜெபம்:** பரலோகத்தில் இருக்கும் பரமபிதாவே. எங்கள் பயங்களை மேற்கொள்ள எங்களுக்கு உதவி செய்யும். தாவீதுக்கு (உமது உல்லமையின் மேல்) நீர் அருளிய அதே நம்பிக்கையையும் விசுவாசத்தையும் எங்களுக்கும் தந்தருளும். ஆமென்.

Copyright © 2003 by Paul-Timothy. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net